விருதுநகர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மதுரை விமான நிலையத்தில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி புத்தகம் வழங்கி வரவேற்றார்.

விருதுநகர் மாவட்டத்தில் நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரைக்கு வருகைதந்த கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை மதுரை விமான நிலையத்தில் தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளி மாணவர் பிரஜித், தான் வரைந்த முதலமைச்சர் அவர்களின் ஓவியத்தை அவரிடம் வழங்க வேண்டும் என்று காணொலி மூலமாக கோரிக்கை விடுத்திருந்தார். அதனைப் பார்த்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அம்மாணவனை நேற்று (7.2.2026) முகாம் அலுவலகத்திற்கு நேரில் அழைத்து பாராட்டி, நன்றாக படித்து வாழ்வில் சாதிக்க வேண்டும் என்று வாழ்த்தினார். உடன் திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் அம்மாணவனின் குடும்பத்தினர் உள்ளனர்.

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் "சைதையில் முதல்வர் கோப்பை" இறுதிப் போட்டி!

வைகைப்புயல் வடிவேலு – நடிகை தேவயானி பரிசு வழங்கினர்!

சென்னை, பிப்.8- அமைச்சர் - மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் "சைதையில் முதல்வர் கோப்பை" இறுதிப் போட்டியில் நடிகர்கள் வைகைப்புயல் வடிவேல், தேவயானி வீராங்கனைகளுக்கு பரிசு வழங்கினர். முதல் பரிசு ரூ.5 லட்சம் - கோப்பை கண்ணகி நகர் கபடி குழுவினர். இரண்டாம் பரிசு ரூ.3 லட்சம் - கோப்பை ஒட்டன்சத்திரம் எஸ். எம்.வி.கே.சி அணியினர். மூன்றாம் பரிசு - தலா 1.50 லட்சம் இரண்டு அணிகளுக்கு சென்னை ஐ.சி.எப் மற்றும் திருவண்ணாமலை போனிக்ஸ் ஆகிய அணிகளுக்கு வழங்கினர்.

இந்நிகழ்வில் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தேர்தல் பணிக்குழு செயலாளர் வேளச்சேரி பி. மணிமாறன், ரத்னாலோகேஷ்வரன், அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் பாலவாக்கம் தா. விஸ்வநாதன், வாசுகி பாண்டியன், மாவட்ட பொருளாளர் எஸ். பாஸ்கரன், பகுதி கழக செயலாளர்கள் எம்.கிருஷ்ண மூர்த்தி, இரா. துரைராஜ், வே.ஆனந்தம், எம். விநாயகமூர்த்தி, கே.கண்ணன், மு.ராசா, வி.இ. மதியழகன், நொளம்பூர் வே.ராஜன், பெருங்குடி எஸ். வி.ரவிச்சந்திரன், ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், துரை வீரமணி, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள், சைதை மா அன்பரசன், வழக்கறிஞர் எம் ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன், மின்னல் கந்தப்பன், எஸ்.ஏ.அரிகிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

மேலும் இந்நிகழ்வில் சிறந்த கபடி வீராங்கனை நால்வருக்கு கண்ணகி நகர் கார்த்திகா, வெண்ணிலா கபடி குழு ஸ்வேதா, சென்னை ஐ.சி.எப் மந்திரா கோயல், திருவண்ணாமலை போனிக்ஸ் அணி அபிநயா ஆகியோருக்கு ஒரு லட்சம் மதிப்புள்ள ஐபோன் ஆகியவற்றை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்கினார்.

இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு வருகை தரும்

முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிக்கை!

TATA மோட்டாரின் (J.L.R)

இராணிப்பேட்டை, பிப்.8- இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயலாளர் தமிழக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் கழக ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றான மாநிலத் திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்னும் முழக்கத்தை ஓங்கி ஒலித்து இந்திய ஒன்றியத்தில் முதன்மை மாநிலமாக முன்னெடுத்து சிறந்த முதலமைச்சராக திகழும் நமது கழக தலைவர் தமிழக முதல்வர் அவர்கள் நமது மாவட்டத்திற்கு நாளை (09.02.2026) காலை 10.00 மணிக்கு வருகை தருகிறார்.

தமிழகத்தில் வரலாற்று சிறப்புமிக்க திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதல்வர் அவர்களின் நல்லாட்சியில் TATA கார் உற்பத்தி தொழிற்சாலை 470 எக்கர் பரப்பளவில் இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டையில் 35000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ள இந்தியாவின் முன்னனி கார் உற்பத்தி நிறுவனம் உலக முன்னனி கார் உற்பத்தி துவக்கி வைக்க நமது மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழக முதல்வர் - கழக தலைவர் தளபதி அவர்களுக்கு பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டை நுழைவு வாயிலில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

வரலாற்று தலைவர் தளபதி அவர்கள் "கோபாலபுரம் இளைஞர் தி.மு.க." ஆரம்பித்து மாநில இளைஞர் அணி குழுவில் இடம் பெற்று மாநில இளைஞர் அணி செயலாளராக, கழக துணை பொது செயலாளராக, கழக பொருளாளராக, சென்னை மாநகர மேயராக, தமிழக உள்ளாட்சி துறை அமைச்சராக, தமிழக துணை முதலமைச்சராக, கழக தலைவராக தமிழக பொது மக்கள் ஆதரவோடு தமிழக முதல்வராக பொறுப்பு வகித்து பொறுப்புகளுக்கு பெருமையை தேடி தந்தவர் தலைவர் தளபதி ஆவார்.

தமிழகத்தில் பொற்கால ஆட்சியை நடத்தி மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து, மகளிர் உரிமைத் தொகை, பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம், இல்லம் தேடி கல்வி, புதுமைப் பெண் திட்டம், நான் முதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், தமிழ்ப் புதல்வன் திட்டம், தாயுமானவர் திட்டம், மக்களுடன் முதல்வர் ஆகிய வரலாற்றுத் திட்டங்களை செயல்படுத்தும் திராவிட மாடல் நாயகர் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் இந்தியாவிலேயே மற்ற மாநிலங்களுக்கு எடுத்துக் காட்டாய் மாநில முதல்வர்களில் முதல் முதல்வராய் சிறந்து விளங்கும் தலைவர் தளபதி அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளிப்பது நமது தலையாய கடமையாகும்.

எனவே, தமிழக முதல்வர் தளபதி அவர்களுக்கு அளிக்கப்படும் வரலாற்று சிறப்புமிக்க வரவேற்பு நாளை (09.02.2026) திங்கள் கிழமை காலை 9.00 மணிக்கு பனப்பாக்கம் சிப்காட் தொழிற்பேட்டை நுழைவு வாயிலில் எனது தலைமையில் அளிக்கப்பட உள்ளது.

மாவட்ட நிர்வாகிகள் நகர, ஒன்றிய செயலாளர்கள், நிர்வாகிகள், செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் மாவட்ட அணியின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், ஊர் கிளை, உட்கிளை, வட்ட கிளை நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி, சுற்றுச்சூழல் அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மருத்துவ அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளரணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, தொ.மு.ச. ஆகிய அனைத்து அணியினரும் கழக தோழர்களும் மேற்கண்ட நிகழ்ச்சியில் பங்கு பெற்று சிறப்புற அமைய ஒத்துழைப்பு நல்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சேலம் மற்றும் நாமக்கல் மாவட்ட மக்களிடம் கழக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. கருத்துக்களை கேட்டு மனுக்கள் பெற்றார். உடன் கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், அமைச்சர்கள் இரா. இராஜேந்திரன், கோவி. செழியன், மதி வேந்தன், அயலக அணி செயலாளர் அப்துல்லா,நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.சிவலிங்கம், டி.எம். செல்வகணபதி, கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் இருந்தனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்குகிறார்!

குன்றத்தூர் வடக்கு : மௌலிவாக்கம் ஊராட்சியில் நலத்திட்ட உதவிகள்!

ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் அறிக்கை!

சென்னை, பிப்.8- மார்ச் 1 கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் மௌலிவாக்கம் ஊராட்சியில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (08.02.2026 ஞாயிற்றுக்கிழமை) மாலை 04.00 மணியளவில் மௌலிவாக்கம் ஊராட்சி ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தே மாதரம் தலைமையில் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், திவ்யா சத்தியநாதன், தி.க. பாஸ்கரன், வனிதா ராமகிருஷ்ணன், சார்லஸ், விமலேஷ், குபேந்திர ராஜா, முன்னிலையில் நடைபெற உள்ள நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளரும், சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் சிறப்புரையாற்றி நலத்திட்டங்களை வழங்க உள்ளார்.

இதில் காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ.மனோகரன், ஆலந்தூர் தொகுதி பார்வையாளர், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் சீ.பத்மபிரியா, குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் கே.எத்திராஜ், ஒன்றிய கழக நிர்வாகிகள் து.சுந்தர், பொன்.ஜீவா, கே.வசீகரன், பூங்கொடி அரசு, எஸ்.ராஜாதேசிங்கு, எஸ்.சந்தானம், பா.ராஜேந்திரன், எஸ்.கே.துளசிங்கம், மாவட்ட அணியின் நிர்வாகிகள் டி.எஸ்.எம்.ஜெயகரன், டி.ஆர்.சாரதிபெரியநாயகம், ப.குமரவேல், தா. அன்பழகன், தமிழரசி சுரேஷ், சுலைமான் சையத், உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்ள உள்ளனர்.

எனவே குன்றத்தூர் வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து கிளைக் கழக நிர்வாகிகளும் இளைஞரணி, மாணவரணி, மகளிர் அணி சேர்ந்த நிர்வாகிகளும் பெருமளவில் கலந்து கொண்டு சிறப்பித்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு குன்றத்தூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.வந்தேமாதரம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திருத்தணி தொகுதிக்குட்பட்ட சீனிவாசபுரம் கிராமத்தை சார்ந்த சுபாஷினி என்ற மாணவி திருத்தணி சட்டமன்ற உறுப்பினருக்கு தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டு மருத்துவ உதவி வேண்டும் என கோரிக்கைவிடுத்த நிலையில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் மாணவியின் வீட்டிற்கு நேரில் சென்று நலம் விசாரித்து, மாணவியின் மருத்துவ சிகிச்சைக்கு நிதியுதவி வழங்கினார்.